# இலங்கை

# தேசிய சமூகப் பாதுகாப்பு கொள்கை வரைவு
(Draft National Social Protection Policy)

உள்ளடக்கம் (Table of Contents)


*1.* அறிமுகம் (Introduction)

*1.1* சுருக்கக் கண்ணோட்டம் (Overview)

*1.2* தற்போதைய முறைமையில் உள்ள சவால்கள் பற்றிய மதிப்பீடு (Assessment of challenges in the current system)

*1.3* கொள்கைக்கான நியாயம் (Rationale for the Policy)

*1.4* நோக்கெல்லை (Scope)

*2.* கொள்கை நெறிமுறைகள் (Policy Principles)

*3.* கொள்கைக்கான மூலோபாய சட்டகம் (Strategic Framework for the Policy)

*3.1* நோக்கம் (Vision)

*3.2* குறிக்கோள் (Mission)

*3.3* கொள்கை நோக்கங்கள் (Policy Objectives)

*4.* கொள்கை அறிக்கைகள் (Policy Statements)

*5.* ஏற்புடைமை (Applicability)

*6.* நடைமுறைப்படுத்தல் (Implementation)

*7.* வரைவிலக்கணங்கள் (Definitions)

இணைப்பு *1.* தொடர்புடைய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் (Relevant Policies and Legislation)

இணைப்பு *2.* வரவிருக்கும் தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயத்தின் திட்ட வரையறை: *2030* ஆம் ஆண்டுக்கான பாதை (Outline of Forthcoming National Social Protection Strategy: Road to 2030)

# இலங்கை

## தேசிய சமூகப் பாதுகாப்பு கொள்கை வரைவு

(Draft National Social Protection Policy)

### 1. அறிமுகம் (Introduction)

### 1.1 சுருக்கக் கண்ணோட்டம் (Overview)


*சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு முறைமைகளானது மனித மூலதனம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், சமத்துவமின்மையைக் குறைப்பதற்கும், தலைமுறைகளுக்கிடையேயான வறுமையின் சுழற்சியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பெரிதும் உதவும். அவற்றினால் நேரடியாக பொருளாதார மற்றும் நிதி அதிர்ச்சிகளைத் தணிக்கவும், அதன் விளைவாக தாங்குதிறனைக் கட்டியெழுப்பவும், மக்களை வறுமையிலிருந்து வெளியேற்றி, சமூகத்தின் உற்பத்தித்திறன்வாய்ந்த உறுப்பினர்களாக வைத்திருக்க அனுமதியளிக்கும். சமூக ஸ்திரத்தன்மையை ஊக்குவிப்பதிலும், பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களை எந்தவொரு எதிர்பாராத விளைவுகளிலிருந்தும் பாதுகாப்பதன் மூலம் தேவையான பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அரசியல் மற்றும் பொது ஆதரவைப் பேணுவதிலும் அவை முக்கியப் பங்காற்ற முடியும்.*

*ஒரு மனித உரிமை என்ற வகையில், சமூகப் பாதுகாப்பிற்கான அணுகல் முக்கிய சர்வதேச ஒப்பந்தங்கள், மரபுகள் மற்றும் உலகளாவிய உறுதி மொழிகளில் பொதிந்துள்ளது: உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை, சமூக பாதுகாப்பு (குறைந்தபட்ச தரநிலைகள்) மாநாடு, சமூகப் பாதுகாப்பு அடிப்படை மட்டங்கள் பரிந்துரை (Social Protection Floors Recommendation), சிறுவர் உரிமைகள் மாநாடு மற்றும் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய மாநாடு ஆகிய நிறுவனங்களும் இவற்றில் அடங்குபவையாகும். சமூகப் பாதுகாப்பு என்பது நிலைத்தகு அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். நிலைத்தகு அபிவிருத்தி இலக்கு (SDG) 1, 2030 ஆம் ஆண்டுக்குள் எல்லா இடங்களிலும் வறுமையை அனைத்து வடிவங்களில் இருந்தும் முடிவுக்கு கொண்டுவர அனைத்து நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கிறது. இதை அடைவதில் "தேசிய ரீதியாக பொருத்தமான சமூகப் பாதுகாப்பு முறைமைகள் மற்றும் அடிப்படை மட்டங்கள் உட்பட அனைவருக்குமான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதையும் மேலும் 2030 ஆம் ஆண்டளவில் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் கணிசமான உள்ளீர்ப்பை அடைவதையும் கோரும்" பேண்தகு அபிவிருத்தி இலக்கு 1.3 ஆல் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளவாறு சமூகப் பாதுகாப்பு அடிப்படையானதாகும். ஒரு விரிவான சமூகப் பாதுகாப்பு முறைமை ஏனைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் முன்னேற்றத்திற்கு வசதியளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், இலங்கை அரசியலமைப்பின் 27வது பிரிவு சமூகப் பாதுகாப்பை ஒரு முக்கிய கொள்கையாக*

நிறுவுவதுடன், "நியாயமான மற்றும் சுதந்திரமான சமூகத்தை தாபிப்பதற்கு" நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு குறிக்கோளாக போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு அழைப்பு விடுக்கிறது. இந்த முதலாவது தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையானது (NSPP) இலங்கையால் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் மரபுகளைக் கருத்திற் கொண்டு இலங்கையின் அரசியலமைப்புக் கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கும் தற்போதுள்ள சட்டத்தை பூரணப்படுத்துவதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது (இணைப்பு 1).

இந்த தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையானது (NSPP) இலங்கையில் சமூகப் பாதுகாப்பு நோக்கெல்லையை வரையறுப்பதுடன், தேவையான கொள்கை மற்றும் சட்டம், நிர்வாகம் மற்றும் நிறுவன ஏற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு முறைமைகளை செயற்படுத்துவதன் மூலம் ஒரு ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு முறைமையை நிறுவுவதற்கான அடிப்படையை வழங்குகிறது. மேலும், இலங்கையில் சமூகப் பாதுகாப்பு அடைவதை நோக்கமாகக் கொண்ட நீண்ட கால இலக்குகள், அந்த நோக்கத்தை அடைவதற்காக உருவாக்கப்படும் சமூகப் பாதுகாப்பு முறைமையின் முக்கிய கூறுகள் மற்றும் இக் கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து முடிவுகளுக்கும் வழிகாட்டும் கொள்கைகள் ஆகியவற்றை இக் கொள்கை விவரிக்கிறது.

சமூகப் பாதுகாப்பின் ஒருங்கிணைந்த மற்றும் வினைத்திறனான முறைமையை உருவாக்குவதற்கான பொதுவான வழிகாட்டி மற்றும் திட்டமிடல் கருவியாக NSPP பயன்படுத்தப்படலாம். இந்த ஒருங்கிணைந்த முறைமையானது, முயற்சிகள் பிரதியாவதைத் தவிர்த்து முகவர் அமைப்புக்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தலையீடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கும், இதற்குப் பதிலாக, மேலும் பயனுள்ள தலையீடுகளுக்கு இடமளித்து செயன்முறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும், NSPP தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயத்துடன் (NSPS) இணைந்து அனைத்து பிரஜைகளுக்கும் முழு வாழ்க்கைச் சக்கரத்திற்கும் ஆதரவளிக்கும் மிகவும் சமமான மற்றும் வினைத்திறனான சமூகப் பாதுகாப்பு முறைமையை செயற்படுத்துவதற்கான ஒரு சட்டகத்தை வழங்குகிறது. தேசிய சமூக பாதுகாப்பு மூலோபாயம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான முன்னோக்கிய வழி தொடர்பான மூலோபாய வழிகாட்டலை வழங்கும் அதேநேரம், NSPP ஆனது இலங்கையில் சமூகப் பாதுகாப்புத் துறைக்கு ஒரு நீண்ட கால தொலைநோக்கை வழங்குகிறது. இணைப்பு 2, எதிர்வரும் தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயம் 2030 இற்கான பாதை பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தை வழங்குகிறது:




### *1.2* தற்போதைய முறைமையில் உள்ள சவால்கள் பற்றிய மதிப்பீடு (Assessment of challenges in the current system)

சட்ட மற்றும் கொள்கை ஆவணங்கள் காலப்போக்கில் உருவாக்கப்பட்டு, அவ்வப்போதைய அரசாங்கங்களின் கருத்தியல்கள் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் மரபுகளால் தாக்கம் பெற்று, சமூகப் பாதுகாப்பை நிர்வகிக்கும் அணுகுமுறையில் நிலைத்தன்மை அற்றுப்போக வழிவகுக்கும். மேலும், பல ஆவணங்களுக்கிடையிலான தொடர்புகள் மற்றும் அதன் விளைவாக, இந்த ஆவணங்களால் நிறுவப்பட்ட நிறுவனங்கள் தெளிவற்றவையாக மாறிவிடுகின்றன. எவ்வாறாயினும், வரலாற்று ரீதியாக சமூகப் பாதுகாப்பு என்பது ஒரு தனித் துறையாகக் கருத்தாக்கம் பெறவோ அல்லது நிர்வகிக்கப்படவோ இல்லை என்பதால், சமூகப் பாதுகாப்பிற்கான தேசிய தொலைநோக்கு, கொள்கை அல்லது மூலோபாயம் எதுவும் இல்லாதுள்ளது. இந்த ஒத்திசைவின்மையானது பலவீனமான ஆளுகை மற்றும் அனைத்து மட்டங்களிலும் நிறுவன மற்றும் நடைமுறைப்படுத்தல் சவால்களை தோற்றுவித்துள்ளது. இந்தச் சவால்களுக்கு மேலதிகமாக, ஒரு ஒத்திசைவான சமூகப் பாதுகாப்பு முறைமையை உறுதிசெய்ய, பல்வேறு சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளது. இலங்கையில் சமூகப் பாதுகாப்பிற்கு தெளிவானதொரு அரசாங்க வரையறை இல்லை. இதன் காரணமாக சமூகப் பாதுகாப்பை உள்ளடக்கியவற்றின் வகைப்படுத்தல் எதுவும் இல்லை, எனவே சமூகப் பாதுகாப்புத் துறையின் எல்லைகள் தெளிவானதாக இல்லை.

தொடர்புடைய கொள்கைகளை உருவாக்கும், சட்டத்தை முன்மொழியும், மற்றும் இத்துறைக்கு மேற்பார்வையினை வழங்கும் ஒரு முன்னணி முகவர் நிறுவனம் இல்லாதிருப்பது ஒரு குறிப்பிடத்தக்க இடைவெளியாக உள்ளது. பல அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பலவிதமான சமூகப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்ற போதிலும் ஒரு முன்னணி முகவர் நிறுவனம் இல்லாத

நிலையில், குறைந்தளவான ஒருங்கிணைப்பு அல்லது கொள்கை ஒத்திசைவுடனேயே அவ்வாறு செய்துள்ளன. இது நிகழ்ச்சித்திட்டங்கள் செய்ததையே மீளச் செய்யும் நிலையினைத் தோற்றுவித்துள்ளது. பொறுப்புக்கூறல் இல்லாமை செயலாற்றுகையை பாதித்துள்ளதுடன்,செலவு கூடிய மற்றும் வினைத்திறனற்ற முறைமைக்கு வழிவகுத்துள்ளது. டிஜிட்டல் முறைமை மற்றும் தரவு இதுவரை போதுமான அளவு மூலதனமாக்கப்படவில்லை. தொகுதியில் உள்ள ஒத்திசைவு இல்லாமை வினைத்திறனின்மையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், செயலாற்றுகையையும் செயற்திறனையும் பாதிக்கிறது.

முன்னோக்கிச் செல்லும்போது, இலங்கையின் சமூகப் பாதுகாப்பு அமைப்பு, முதன்மையாக மக்கள்தொகை மாற்றங்களுடன் தொடர்புடைய மேலும் சவால்களை எதிர்கொள்கிறது. குறைந்த அளவிலான கருவளம் மற்றும் வேகமாக அதிகரித்துவரும் முதியோர் தொகை முதியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சமூகப் பாதுகாப்பு முறைமையின் இயலுமை பற்றிய கரிசனைகளை தோற்றுவிக்கிறது. சிறுவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற ஏனைய பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான பராமரிப்புத் தேவைகள் தொடர்ந்து முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கும். இது கட்டுப்படியான, அணுகக்கூடிய சமூகப் பராமரிப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

தொற்றுநோய்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் உட்பட ஒன்றிலொன்று பாதிப்புச்செலுத்தும் பல்வேறு அதிர்ச்சிகளுக்கு இலங்கை முகம்கொடுத்துள்ளது. இருப்பினும், சமூகப் பாதுகாப்பு முறைமை போதுமான அளவு தகவமைக்கப்படவில்லை. இதன் விளைவாக, வறுமைக் கோட்டிற்கு சற்று மேலே வாழும் பெரும் எண்ணிக்கையானவர்கள் பொருளாதார அல்லது காலநிலை அதிர்ச்சிகளின் போது வீழும் அபாயம் உள்ளது.


இருப்பினும் பல முக்கிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. நாட்டு மக்களை அவர்களின் வாழ்க்கைச் சக்கரங்கள் முழுவதிலும் தேவைப்படும் நேரங்களில் போதுமான வகையிலும் வினைத்திறனாகவும் பாதுகாக்க சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மூலம் பரந்த சமூக பாதுகாப்பு வெளியினை உருவாக்க வேண்டும்.

### 1.3 கொள்கைக்கான நியாயம் (Rationale for the Policy)

விரிவான கொள்கை வழிகாட்டுதல் மற்றும் ஒரு ஒருங்கிணைந்த மூலோபாய சட்டகம் இல்லாதிருப்பது சமூகப் பாதுகாப்பு அமைப்பில் தற்போதுள்ள சவால்களுக்கு முக்கிய காரணங்களாகக் கருதப்படலாம். இது பயனாளிகளை உள்வாங்குதல் முதல் போதுமான அளவு நன்மைகள் வரையிலான பிரச்சினைகள் உட்பட பல குறைபாடுகளை ஏற்படுத்துகிறது. மேலும், தற்போதைய சமூகப் பாதுகாப்பு முறைமையில் உள்ளடங்கிய சிதறிய நிகழ்ச்சித் திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் உற்பத்திகளின் தொகுப்பு வரையறுக்கப்பட்ட வினைத்திறனைக்

கொண்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், இதனால், அபிவிருத்தி விளைவுகளில் போதுமான தாக்கங்கள் காணப்படவில்லை.

### *1.4* நோக்கெல்லை *(*Scope)




இக் கொள்கையானது சமூகப் பாதுகாப்பை தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் இடர்நிலை மற்றும் நிலையற்ற தன்மையை நிர்வகிக்கவும், வறுமை மற்றும் சமத்துவமின்மையிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், வாழ்க்கைச் சக்கரங்கள் முழுவதும் பொருளாதார வாய்ப்புகளை அணுக அவர்களுக்கு உதவும் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் தொகுப்பாக வரையறைசெய்கிறது.

சமூகப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பின் மூன்று இலக்குகளான மக்களின் தாங்குதிறன், சமத்துவம் மற்றும் வாய்ப்பை அதிகரிப்பதன் மூலமும், நாம் அடிப்படை தூண்களாக வகைப்படுத்தும் பல கருவிகளின் மூலமும், இதை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதிய சமூகப் பாதுகாப்பு முறைமையின் முக்கிய தூண்களில் சமூக உதவி, சமூகப் பராமரிப்பு, சமூகக் காப்புறுதி மற்றும் தொழிற் சந்தை மற்றும் உற்பத்தி உள்ளீர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் *(Productive inclusion programs)* ஆகியவை அடங்கும்.

*(i)* **<u>சமூக உதவி, (Social assistance)</u>** சமூக உதவி போதியளவு உதவி மூலங்கள் எதுவுமில்லாத பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கானது. சமூக உதவி என்பது பங்களிப்பற்ற பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது குடும்பங்கள்/குடித்தனங்களை வறுமை மற்றும் ஏழ்மை நிலையில் இருந்து பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் என வரையறுக்கப்படுகிறது. பெறுநரின் மனித மற்றும் பௌதீக மூலதனத்தில் முதலீடுகளை மேம்படுத்துவதன் மூலமும், வறுமையிலிருந்து தங்களை மீட்டெடுக்க அவர்களுக்கு உதவியளிப்பதன் மூலமும் அவை பெரும்பாலும் ஒரு ஊக்குவிப்புப் பாத்திரத்தை வகிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

*(ii)* **<u>சமூகப் பராமரிப்பு, (Social care)</u>** இது தங்களைத் தாங்களே பராமரிக்க முடியாத மக்களுக்கு உதவும் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் சேவைகளைக் குறிக்கிறது; தனிநபர்கள், குடும்பங்கள்/குடித்தனங்கள் மற்றும் விரிந்த சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்த அல்லது ஊக்குவிக்க வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வளங்கள்.


*(iii)* **<u>சமூகக் காப்புறுதி, (Social insurance)</u>** இதில் முதுமை, மாற்றுத்திறன், முக்கிய குடும்பப் பராமரிப்பாளரின் மரணம் மற்றும் பல்வேறு சுகாதார மற்றும் பொருளாதார அதிர்ச்சிகளுக்கு எதிராக பகிரங்கமாக வழங்கப்பட்ட அல்லது ஆணைக்குட்பட்ட காப்புறுதி அடங்கும். சமூகக் காப்புறுதித் திட்டங்கள் பெரும்பாலும் முறைசார்ந்த மற்றும் முறைசாராத வேலைவாய்ப்பு தொடர்பானதாகும். இலங்கை சூழலில், பங்களிப்புடன் கூடிய மற்றும் பங்களிப்பு அல்லாத திட்டங்கள் சமூக காப்புறுதியாகக் கருதப்படுகின்றன.[1]

*(iv)* **<u>தொழிற் சந்தை மற்றும் உற்பத்தி உள்ளீர்ப்புத் திட்டங்கள்[2], (Labour market and productive inclusion programmes),</u>** இது மந்தமான மற்றும் செயற்திறமான தலையீடுகளை உள்ளடக்குவதுடன், கண்ணியமான வேலை நிகழ்ச்சி நிரலுக்கு பங்களிக்கின்றன. மந்தமான தொழிற் சந்தை கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் முக்கிய தொழில் தரநியமங்கள், வேலை பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் தொழில் நிபந்தனைகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். செயற்திறமான நிகழ்ச்சித் திட்டங்கள் இடைநிலை சேவைகள் மற்றும் வேலை உருவாக்கம் மூலம் வேலைவாய்ப்புக்கு வசதியளிக்கும் அதேநேரம் தனிநபர்கள்/பெறுநர்களின் மனித மூலதனத்தை வேலையின் போதான பயிற்சி உட்பட, பயிற்சி ஆதரவின் மூலம் அதிகரிக்கின்றன. நிதி உதவி, பயிற்சி மற்றும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய தலையீடுகளின் தொகுப்பின் மூலம் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் நிலையான வாழ்வாதாரத்தை அடைய உற்பத்தி உள்வாங்கல் நிகழ்ச்சித்திட்டம் *(productive inclusion programmes)* உதவுகிறது.

## 2. கொள்கை நெறிமுறைகள் (Policy Principles)

[1] வரலாற்று ரீதியாக இலங்கையில் சமூக காப்புறுதி சமூக பாதுகாப்பு என அழைக்கப்பட்டது. இந்தக் கொள்கையில், சமூகக் காப்புறுதி என்ற சொல் மிகவும் அண்மைய மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சமூகக் காப்புறுதி என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது.

[2] தொழிற் சந்தை தலையீடுகளின் தேவைப் பக்கம் தொடர்பான கொள்கைகள் இந்தக் கொள்கை சட்டகத்தில் கலந்துரையாடப்படவில்லை.




பின்வரும் முக்கிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது:

- **சமவாய்ப்பு மற்றும் அனைவரையும் உள்வாங்குதல் (Equity and inclusion)** *:* அனைத்து பிரஜைகளும் தேவைக்கேற்ப, வாழ்க்கைச் சக்கரம் முழுவதும் போதுமான பொருளாதார மற்றும் சமூக பாதுகாப்புக்கான அணுகலை கொண்டிருக்க வேண்டும். சமவாய்ப்பு மற்றும் சமூக உள்வாங்கல் கொள்கைகளின்படி சமூகப் பாதுகாப்பு முறைமைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவது என்பது, பாதிக்கப்படக்கூடிய மற்றும் பின்தங்கிய குழுக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தடைகளுக்கு வழங்கல் முறைமைகள் குறிப்பாக கவனம் செலுத்தும் என்பதாகும்.

- **தாங்குதிறன்*(Resilience) :*** தகவமைப்பு சமூகப் பாதுகாப்பு முறைமைகளை ஊக்குவிப்பது, வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களின் தாங்குதிறனை, அவர்கள் வறுமையில் *(ஆழமாக)* வீழ்ந்துவிடாதிருப்பதை உறுதிசெய்து, அதிர்ச்சிகளுக்கு தம்மை தகவமைத்துக்கொள்வதற்கும் அவற்றுக்குத் தம்மை தயார்படுத்துவதற்கும், அவற்றை சமாளிப்பதற்கும் அவர்களின் திறனில் முதலீடு செய்வதன் மூலம் கட்டியெழுப்ப உதவும்.

- **அணுகுமுறையில் ஒத்திசைவு (Coherence in approach)***:* சமூகப் பாதுகாப்பு என்பது ஒரு பரந்த தேசிய அபிவிருத்தி மூலோபாயத்திற்குள் ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்பதுடன், எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான அரசாங்கத்தின் இயலுமையை அதிகரிக்கவும், சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் ஒருங்கிணைந்த முறையில் ஒன்றையொன்று வலுப்படுத்துவதை உறுதிப்படுத்தவும் கொள்கை ஒத்திசைவை

உறுதிப்படுத்த வேண்டும். மேலும், அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்முயற்சிகள், பல துறை அணுகுமுறையைப் பின்பற்றி முழுமையாக சென்றடைவதையும் செயற்திறனையும் அதிகரிக்க, ஒன்றையொன்று பூர்த்தி செய்ய வேண்டும். சமூக உதவித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல், உதாரணமாக, நிலைத்தகு வாழ்வாதார வாய்ப்புகளுக்கு வசதியளிக்க ஒரு படிமுறை அணுகுமுறையை கைகொள்ள வேண்டும்.

- **நல்லாட்சி மற்றும் வெளிப்படைத்தன்மை***(Good governance and transparency):* சமூகப் பாதுகாப்பு முறைமைகள் ஒரு வலுவான நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பை பிரதானமாக கொண்டிருக்க வேண்டியுள்ளதுடன், அரச துறை விநியோகச் சங்கிலியின் அனைத்து மட்டங்களிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைகூறும் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். கண்டிப்பான தாக்க மதிப்பீடுகள் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம் ஆகியவை நிகழ்ச்சித்திட்ட பெறுபேறுகளின் அதிகபட்ச தாக்கத்திற்கு இடமளிக்கும். வெளிப்படைத்தன்மைமையை வினைத்திறனாக உத்தரவாதப்படுத்த, தகவல் கிடைக்கக்கூடியதாக, அணுகக்கூடியதாக காணப்பட வேண்டியதுடன், மக்கள் மத்தியில் பரப்பப்படவும் வேண்டும். பங்கேற்பை உறுதி செய்வதில் தகவலுக்கான அணுகல் முக்கியமானதாகும். இது ஊழல், வாடிக்கையாளர்களிற்கு சாதகமாக செயற்படல் மற்றும் வினைத்திறனின்மை ஆகியவற்றைக் குறைக்க அல்லது தடுக்கவும் பங்களிக்க முடியும். இதனால் தான், வெளிப்படைத்தன்மையும், நல்லாட்சியும் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளன.
- **செலவு குறைந்த மற்றும் பயனுறுதிவாய்ந்த தன்மை***(Cost efficiency and effectiveness):* சமூகப் பாதுகாப்பு நிகழ்சித் திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் நெருக்கமான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திசைவு முறைமையில் பிரதியாவதையும் மிகமாவதையும் குறைக்கும். வினைத்திறனாக இலக்கமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் உதவி தேவைப்படுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் திறன் கொண்டது என்பதை உறுதிப்படுத்துவது இதில் அடங்கும், இது பற்றாக்குறையாகவுள்ள வளங்கள் மிகவும் வினைத்திறனாக பகிரப்பட வழியமைக்கும்.
- **நிலைத்தகு தன்மை** *(Sustainability):* வாழ்க்கைச் சக்கரங்கள் மற்றும் தலைமுறைகளுக்கு மத்தியில் சமூகப் புறக்கணிப்பு மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கையாள்வதில் நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், சமூகப் பாதுகாப்பிற்கான நீண்ட கால அரசியல் அர்ப்பணிப்பு அவசியமானதாகும்.

- **ஊக்குவிப்புகளுக்கு ஏற்றதாக இருத்தல்*(Incentive compatibility):*** சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தனிநபர்கள் செயற்படுவதற்கும், சேமிப்பதற்கும், முதலீடு செய்வதற்கும் சாதகமான ஊக்குவிப்புகளை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். சமூகக் காப்புறுதித் தலையீடுகளில் கவனம் செலுத்துவதற்கும் பங்களிப்பதற்குமான நோக்குகளை மறுசீரமைத்தல் மற்றும் ஏற்புடையதாகவிருக்குமிடத்து சமூக உதவித் திட்டங்களில் தங்கியிருப்பதிலிருந்து உயர்ந்த நிலைக்கு கொண்டுவருதல் ஆகியவை இதில் அடங்கும்.

## *3.* கொள்கைக்கான மூலோபாய சட்டகம் (Strategic Framework for the Policy)

*NSPP*க்கான மூலோபாய கட்டமைப்பானது எதிர்காலத்தில் இலங்கை எதை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது *(*நோக்கம்*),* மற்றும் அரசாங்கம் இதை *(*குறிக்கோள்*)* எவ்வாறு அடைய முயல்கிறது என்பதை விளக்கும் நோக்கம் மற்றும் குறிக்கோள் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது. அதனையடுத்து கொள்கையானது நோக்கம் மற்றும் குறிக்கோள்களை சாத்தியப்படுத்துவதில் *NSPP* இன் பங்கை எடுத்துக்காட்டுகிறது.

### *3.1* நோக்கம் (Vision)

*NSPP* இன் மேலோட்டமான நோக்கமானது, இடர்களை நிர்வகிப்பதற்கான அவர்களின் திறனை மேம்படுத்துவதன் மூலமும் நிலைத்தகு தேசிய அபிவிருத்திக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதன் மூலமும் அனைத்து பிரஜைகளினதும் சமவாய்ப்பு மற்றும் தாங்குதிறனை மேம்படுத்துவதாகும்.

### *3.2* குறிக்கோள் (Mission)

*NSPP* யின் குறிக்கோளானது திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தலில் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றில் ஒத்திசைவை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து பிரஜைகளும் சமூகப் பாதுகாப்பை அணுகுவதற்கு ஏற்ற வகையில், ஒரு பயனுறுதிவாய்ந்த மற்றும் வினைத்திறனான சமூகப் பாதுகாப்பு முறைமையை உருவாக்கி நிர்வகிப்பதாகும்.

### *3.3* கொள்கை நோக்கங்கள் (Policy Objective)

*NSPP* இன் நோக்கம், தேவைக்கேற்ப, அனைத்து பிரஜைகளும் வாழ்க்கைச் சக்கரம் முழுவதும் பொருத்தமான சமூகப் பாதுகாப்பு ஆதரவை அணுகக்கூடிய வகையிலான ஒரு சமூகப் பாதுகாப்பு முறைமையை உருவாக்குவதாகும். மேலும், *NSPP* ஆனது, அனைவருக்கும் போதுமான சமூகப் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு இணைந்து செயற்பட வேண்டிய, அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள பங்குதாரர்களுக்கும், அரச சாரா நிறுவனங்களுக்கும் நன்கு ஒருங்கிணைந்த மற்றும் இணக்கமான சமூகப் பாதுகாப்பு முறைமையை உருவாக்குவதற்கான மூலோபாய வழிகாட்டுதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தற்போதைய முறைமையில் உள்ள பலவீனங்களை நிவர்த்தி செய்வதுடன், சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை திட்டமிடல், வரவு செலவுத் திட்டம் மற்றும்

நடைமுறைப்படுத்துதல் ஆகியவை இடம்பெற வேண்டிய ஒரு ஒட்டுமொத்த சட்டகத்தை வழங்குகிறது. இந்தத் துறைக்கு ஒருங்கிணைந்த மற்றும் மூலோபாய அணுகுமுறையை உறுதி செய்வதற்கு இருக்க வேண்டிய பரந்த கொள்கை மற்றும் கட்டமைப்பையும் இது அடையாளப்படுத்துகிறது.

## *4.* கொள்கை அறிக்கைகள் (Policy Statements)

இப் பிரிவில் உள்ள கொள்கை அறிக்கைகள், இக் கொள்கையில் இலங்கை அரசாங்கம் உறுதியளிக்கும் உயர்மட்ட வழங்கல்களாகும் என்பதோடு, இவை ஒவ்வொன்றும் இக் கொள்கையின் நோக்கத்தை அடைவதற்கு அவசியமானவையாகும். இந்த கொள்கைப் பிரகடனங்கள் *NSPP* இல் ஊக்குவிக்கப்படும் ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு முறைமையின் முக்கிய கூறுகளை விவரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கமானது பின்வருவனவற்றை மேற்கொள்ளும்:

1. வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு விசேட கவனம் செலுத்துவதன் மூலம் வாழ்க்கைச் சக்கரத்தில் உள்ள அனைத்து பிரஜைகளையும் உள்ளடக்கும் வகையில் உலகளாவிய சமூகப் பாதுகாப்பை முற்போக்கான முறையில் சாத்தியப்படுத்துவதற்காக செயற்படுதல்.

2. நாட்டின் அனைத்து பிரஜைகளிடையேயும் குறைந்தபட்ச நல்வாழ்வை உறுதி செய்வதற்காக அனைத்து பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளாலும் (ஒரு பயனுள்ள, நிலையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முறைமை மூலம்) போதுமான சமூக ஆதரவுக்கான அணுகலை உறுதி செய்தல்.

3. தேவைப்படுபவர்களுக்கு / தங்களைப் பராமரிக்க முடியாதவர்களுக்கு போதுமான பராமரிப்பு கிடைப்பதை உறுதி செய்யதல்.

4. அனைத்து பிரஜைகளுக்கும் கூட்டான மற்றும் தனித்த *(covariate and idiosyncratic)* அதிர்ச்சிகளுக்கு எதிராக தாங்குதிறனை உருவாக்குவதற்கு போதுமான மற்றும் கட்டுப்படியான சமூகக் காப்புறுதித் திட்டங்களுக்கான அணுகலை உறுதிசெய்தல்.

5. கண்ணியமான வேலை/உற்பத்தித்திறன்வாய்ந்த வேலைவாய்ப்புக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் தொழிற் சந்தை மற்றும் உற்பத்தி உள்வாங்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்குதல்.

6. சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் முறைமைகளின் சீரமைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்திசைவை ஏற்படுத்துதல்.

7. சமூகப் பாதுகாப்பிற்கான தேசிய தொலைநோக்கை படிப்படியாக நிறைவேற்ற நீண்ட கால, நிலையான நிதியளிப்புக்கு வசதியளித்தல்.

ஒரு *NSPS* இந்தக் கொள்கை பிரகடனங்கள் ஒவ்வொன்றையும் அவை ஒவ்வொன்றும் வினைத்திறனாக வழங்கப்படுவதை உறுதிசெய்ய தேவையான நடவடிக்கைகள் பற்றிய கூடுதல் விவரங்களை வழங்குவதன் மூலம் விவரிக்கும்.

## 5. ஏற்புடைமை (Applicability)

இலங்கையில் தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களில் சமூகப் பாதுகாப்பைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பதற்கான நீண்டகால மூலோபாய தொலைநோக்கை *NSPP* பலப்படுத்துகிறது. சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் குறுக்கு வெட்டாகக் காணப்படுவதுடன், தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களில் பல அரச நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே, நாட்டிற்கான ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு முறைமையை வழங்குவதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையை மேம்படுத்துவதற்கான ஒட்டுமொத்த வழிகாட்டுதலை *NSPP* வழங்குகிறது.

## 6. நடைமுறைப்படுத்தல் (Implementation)

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நிரல் முகவரமைப்புகளின் குறுக்கு வெட்டு மூலமும் மற்றும் தேசிய மற்றும் துணைத் தேசிய மட்டங்களிலும் வழங்கப்படும். எனவே, இத்துறைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்கும், ஒத்திசைவுக்கு வசதியளிப்பதற்கும் அமைச்சுக்களுக்கு இடையேயான ஒரு ஒருங்கிணைப்புக் குழு (இதன் பின்னர் குழு என குறிப்பிடப்படுகிறது) நியமிக்கப்படும். திட்டமிடல் துறை ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சின் செயலாளர் இக்குழுவுக்கு தலைமைதாங்குவார்.

இக்குழுவானது, *NSPP*யை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய மேலதிக செயலாளர்கள் அல்லது பணிப்பாளர் நாயகங்களை உள்ளடக்கிய பல பங்குதாரர்களை உடையதாக இருக்கும். தனியார் துறை பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அபிவிருத்தி பங்காளிகள் இக்குழுவிற்கு அழைக்கப்படுவார்கள். தேசிய திட்டமிடல் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள திணைக்களம் தொழில்நுட்ப உதவியை வழங்கும்.

அனைத்து சமூகப் பாதுகாப்புச் சேவைகளும் ஒரு ஒத்திசைவான மற்றும் வினைத்திறனான முறையில் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்யும் வகையில் *(i)* இந்தத் துறையை நிர்வகிக்கும் சட்டத்தை முன்மொழிதல் மற்றும் கொள்கைகள்/மூலோபாயங்களை உருவாக்குதல் மற்றும் *(ii)* தேசிய மற்றும் துணைத்தேசிய மட்டங்களில் *NSPP*யின் ஒருங்கிணைப்பு, நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுக்கு இந்தக் குழு பொறுப்பாகும். விளைவுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க *NSPS* இல் கோடிட்டுக்காட்டப்பட்ட இலக்குகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளை இக்குழு பயன்படுத்தும். குழு குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை கூடும். தேவைகளின் அடிப்படையில் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தலைவர் முடிவு செய்யலாம்.

ஒவ்வொரு நடைமுறைப்படுத்தல் அமைச்சிலும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் கண்காணிக்கவும் மேலதிக செயலாளர் அல்லது பணிப்பாளர் நாயகம் மட்டத்தில் ஒரு மையப்புள்ளி *(focal point)* இருக்கும். செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும், மீளாய்வு செய்யவும், முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், பணித் திட்டங்களையும் கால எலையையும் இற்றைப்படுத்தவும், குழுவின் பரிசீலனைக்காக அறிக்கைகளைத் தயாரிக்கவும், மையப் புள்ளிகள் குழுவும் குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை கூடும்.

## 7. வரைவிலக்கணங்கள் (Definitions)

**தகவமைப்பு சமூக பாதுகாப்பு*(Adaptive social protection):*** குடும்பங்கள் அதிர்ச்சிகளைத் தாங்குவதற்குத் தயாராவதற்கும், அவற்றை சமாளிக்கவும், அவற்றுக்கு தம்மை தகவமைத்துக்கொள்ளவும் அதன் மூலம் அவர்களின் நல்வாழ்வைப் பாதுகாத்து, அவர்கள் வறுமையில் வீழ்ந்துவிடாமல் அல்லது சிக்காமல் இருப்பதை உறுதி செய்யவும் உதவும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தலையீடுகளின் தொகுப்பு. இவை குறிப்பாக அதிர்ச்சிகள் மற்றும் நெருக்கடிகளின் போது, முறைமையை விரிவாக்குவது மிக முக்கியமானதாக இருக்கும் போது, விரைவாக அளவிடக்கூடிய மற்றும் குறைக்கக்கூடிய முறைமைகளாகும். விரிவாக்கம் என்பது சமூகப் பாதுகாப்பு முறைமைகளில் அதிக மக்களை உள்ளீர்க்கும் வகையில் கிடைமட்டமாகவோ, அல்லது அதே நபர்களை அதிக பலன்களுடன் ஆழமாக உள்ளடக்கியதான செங்குத்தாகவோ இருக்கும். அவை அதிர்ச்சி-பதிலளிப்பு சமூக பாதுகாப்பு என்றும் அழைக்கப்படுகின்றன.

**தன்னிறைவுக்கான வழி *(Graduation):*** தன்னிறைவுக்கான வழி *(Graduation)* என்பது தனிநபர்கள் தீவிர வறுமையிலிருந்து வெளியேற உதவுவதையும், ஒரு கட்டம் கட்டமான, தீவிரமான மற்றும் முழுமையான உதவிப் பொதியை வழங்குவதன் மூலம் அவர்களை தாங்குதிறன் கொண்ட, நிலையான வாழ்வாதாரத்திற்கான பாதையில் வைப்பதை நோக்கமாகக் கொண்ட ஆதரவைக் குறிக்கிறது. இந்த உதவிப் பொதியில் தொழிநுட்ப மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சி, நிதி உள்ளீர்ப்பு மற்றும் பயிற்சி மற்றும் வழிகாட்டுதலுடன் *(coaching and mentoring)* இலக்குமயப்பட்ட சமூக உதவியை இணைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

**தொழிற் சந்தை மற்றும் உற்பத்தி உள்ளீர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் (*Labour market and productive inclusion programmes):*** இது மந்தமான மற்றும் செயற்திறமான தலையீடுகளை உள்ளடக்கியது என்பதுடன், கண்ணியமான வேலை நிகழ்ச்சி நிரலுக்கு பங்களிக்கிறது. மந்தமான தொழிற் சந்தை கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் முக்கிய தொழில் தரநியமங்கள், வேலை பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் தொழில் நிபந்தனைகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். செயற்திறமான நிகழ்ச்சித் திட்டங்கள் இடைநிலை சேவைகள் மற்றும் வேலை உருவாக்கம் மூலம் வேலைவாய்ப்புக்கு வசதியளிக்கும் அதேநேரம் தனிநபர்களின் மனித மூலதனத்தை வேலையின் போதான பயிற்சி உட்பட, பயிற்சி ஆதரவின் மூலம் அதிகரிக்கின்றன. நிதி உதவி, பயிற்சி மற்றும் ஆலோசனை மற்றும்

வழிகாட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய தலையீடுகளின் தொகுப்பின் மூலம் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் நிலையான வாழ்வாதாரத்தை அடைய உற்பத்தி உள்ளீர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் *(productive inclusion programmes)* உதவுகிறது. இந்த திட்டங்கள் குறிப்பாக மிகவும் தேவைப்படுபவர்களுக்கு, வேலைவாய்ப்பே முதன்மையான வருமானம் மற்றும் குடும்பங்களின் நுகர்வு என்பதை எடுத்துக்காட்டி, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இன்றியமையாதவை. *(சமூகப் பாதுகாப்புக் கொள்கையின் ஒரு பகுதியாக தொழிலாளர் சந்தைகளின் தேவைப் பக்கத்துடன் தொடர்புடைய சிக்கல்கள் கவனிக்கப்படவில்லை.)*

**வாழ்க்கைச் சக்கர அணுகுமுறை***(Life cycle approach):* சமூகப் பாதுகாப்பிற்கான வாழ்க்கைச் சக்கர அணுகுமுறையானது, தனிநபர்கள் வாழ்வின் பல்வேறு நிலைகளில் வெவ்வேறு இடர்களையும் பாதிப்புகளையும் எதிர்கொள்வதையும், ஒவ்வொரு கட்டத்திலும் இந்த அபாயங்களை எதிர்கொள்ளும் வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை வடிவமைக்க முடியும் என்பதையும் அங்கீகரிக்கிறது. இது அடிப்படை வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் இடர் நிலையை துணிந்தேற்பதை ஊக்குவித்தல் ஆகிய இடர் முகாமைத்துவத்தின் இரட்டைப் பாத்திரத்தை வலியுறுத்துகிறது இடர் நிலைமைக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருப்பதாலும் இயல்பாகவே பொருத்தமான இடர் முகாமைத்துவ கருவிகள் இல்லாதிருப்பதாலும், ஆபத்தான ஆனால் அதிக வருமானம் ஈட்டித்தரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விட்டும் தடுக்கும் , ஏழைகளை அவர்கள் நீண்டகாலம் சிக்கித்தவிக்கும் நீடித்த வறுமை நிலையிலிருந்து படிப்படியாக வெளியேற சந்தர்ப்பமளிக்கிறது .

**பெறுனர்** ***(Recipient):*** தனிநபர் அல்லது குடும்பம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெற்றுக்கொள்ளும் பயன்கள்.

**இடர்நிலை*: (Risk)*** *(i)* தனிநபர் வாழ்க்கைச் சக்கரம், *(ii)* பொருளாதாரம், *(iii)* சூழல் மற்றும் *(iv)* ஆளுகை தொடர்பானவை உட்பட பல வகையான இடர் நிலைகள் உள்ளன. இந்த அதிர்ச்சிகள் தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் பிராந்தியங்களை பெரும்பாலும் முன்கணிக்க முடியாத வகையில் அல்லது தடுக்க முடியாத வகையில் தாக்குகின்றன எனவே, அவை வறுமையை ஏற்படுத்துவதற்கும் ஏற்கனவேயுள்ள வறுமையை மேலும் மோசமாக்குவதற்கும் காரணமாக அமைகின்றன. இடர் நிலை என்பது ஒரு மாறும் கருத்தாகும் - பாதுகாப்பின்மை என்பது நிகழ்வுகளின் அபாயங்ளுக்கு ஆளாவதாகும், அவை நிகழும் பட்சத்தில், பாதிப்பை மேலும் அதிகரித்துவிடுகின்றன.

***சமூக உதவி*** ***(Social Assistance):*** *சமூக உதவி என்பது பங்களிப்பற்ற பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்* அல்லது குடும்பங்கள்/குடித்தனங்களை வறுமை மற்றும் ஏழ்மை நிலையில் இருந்து பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் என வரையறுக்கப்படுகிறது. பெறுநரின் மனித மற்றும் பௌதீக மூலதனத்தில் முதலீடுகளை மேம்படுத்துவதன் மூலமும், வறுமையிலிருந்து தங்களை மீட்டெடுக்க அவர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலமும் அவை பெரும்பாலும் ஒரு ஊக்குவிப்புப் பாத்திரத்தை வகிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**சமூகப் பராமரிப்பு** ***(Social Care):*** சமூகப் பராமரிப்பு என்பது தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள முடியாத மக்களுக்கு உதவுவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் சேவைகள்; தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் விரிந்த சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்த அல்லது ஊக்குவிக்க வடிவமைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வளங்கள்; மற்றும் சமூக மோதலைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் என்பவற்றைக் குறிக்கிறது.

**சமூக காப்புறுதி** ***(Social insurance),*** சமூக காப்புறுதி, இதில் முதுமை, மாற்றுத்திறன், முக்கிய குடும்பப் பராமரிப்பாளரின் மரணம் மற்றும் பல்வேறு சுகாதார மற்றும் பொருளாதார அதிர்ச்சிகளுக்கு எதிராக பகிரங்கமாக வழங்கப்பட்ட அல்லது ஆணைக்குட்பட்ட காப்புறுதி அடங்கும். சமூகக் காப்புறுதித் திட்டங்கள் பெரும்பாலும் முறைசார்ந்த மற்றும் முறைசாராத வேலைவாய்ப்பு தொடர்பானதாகும். இலங்கை சூழலில், பங்களிப்புடன் கூடிய மற்றும் பங்களிப்பு அல்லாத திட்டங்கள் சமூக காப்புறுதியாகக் கருதப்படுகின்றன. .

**சமூகப் பாதுகாப்பு** ***(Social Protection):*** சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு ஆபத்து மற்றும் நிலையற்ற தன்மையை நிர்வகிக்க உதவுகின்றன, வறுமை மற்றும் சமத்துவமின்மையிலிருந்து அவர்களைப் பாதுகாக்கின்றன, மேலும் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் பொருளாதார வாய்ப்பை அணுக உதவுகின்றன. சமூக பாதுகாப்பு, சமூக காப்புறுதி, தொழிலாளர் மற்றும் பொருளாதார உள்ளடக்கம் மற்றும் சமூக உதவி மற்றும் பராமரிப்பு களங்களில் உள்ள பல்வேறு கருவிகளின் மூலம், சமூகப் பாதுகாப்பின் மூன்று இலக்குகளான மக்களின் தாங்குதிறன், சமத்துவம் மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலம் இதை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**நிலைத்தகு தன்மை:** **(*Sustainability):*** ஒரு நீண்ட காலத்திற்கு தொடரப்பட வேண்டிய ஒரு தலையீட்டிற்கான ஆற்றல்.

## இணைப்பு *1* சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் (Annex 1. Social Protection Policies and Legislation)

- *2002* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்
- *(1996*ஆம் ஆண்டின் *17*ஆம் இலக்க*)* சமூக பாதுகாப்புச் சபை சட்டம்
- *2013* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க திவிநெகும சட்டம் *(1995* ஆம் ஆண்டின் சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்திற்குப் பதிலாக*)*
- *2000* ஆம் ஆண்டின் *9*ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் *(*திருத்தம்*)* *(*மற்றும் அதனைத் தொடர்ந்து *2011* ஆம் ஆண்டின் *5*ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம்*)*
- *1996* ஆம் ஆண்டின் *28*ஆம் இலக்க மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம்.

- *1939* ஆம் ஆண்டின் *31*ஆம் இலக்க கல்வி கட்டளைச் சட்டம் *(*மற்றும் அதனைத் தொடர்ந்த திருத்தங்கள், மிக அண்மையில் கல்வி *(*பதவிப் பெயர் மாற்றம் செய்யும்*)* சட்டம் *(1973* ஆம் ஆண்டின் *35*ஆம் இலக்க*) )*
- மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டம் *(1981* ஆம் ஆண்டின் *66*ஆம் இலக்க*)*
- *1954* ஆம் ஆண்டின் *19*ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம் *(SOE)* *(*வேலைவாய்ப்பு ஊதியத்தை ஒழுங்குபடுத்துதல்*)* *(*மற்றும் அதனைத் தொடர்ந்த திருத்தங்கள், மிக அண்மையில் *2018*ஆம் ஆண்டின் *14*ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம் *(*வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்தை ஒழுங்குபடுத்துதல்*)* திருத்தம் .
- ஓய்வூதிய சேவை பிரமாணங்கள் *(1947* ஆம் ஆண்டின் *2*ஆம் இலக்க கட்டளைச் சட்டம்*)*
- *1939* ஆம் ஆண்டின் *32*ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம். *2018*ஆம் ஆண்டின் *15*ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் *(*திருத்தம்*)* சட்டம்.
- *1934* ஆம் ஆண்டின் வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம்.
- *1981*ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவை
- *1981*ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவை
- *1983* விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதி கட்டளைச் சட்டம் *(*அத்தியாயம் *431)* மற்றும் *1983*ஆம் ஆண்டின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதி கட்டளைச் சட்டம்
- *1942* ஆம் ஆண்டின் *18*ஆம் இலக்க அரச சேவை சேமலாப நிதிச் சட்டம்
- *1958* ஆம் ஆண்டின் *15*ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டம்
- *1980* ஆம் ஆண்டின் *46*ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டம்
- *1983* ஆம் ஆண்டின் *12*ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம்
- *1941* ஆம் ஆண்டின் *27*ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்
- *1987* ஆம் ஆண்டின் *12*ஆம் இலக்க விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டச் சட்டம்
- *2002* ஆம் ஆண்டின் *25*ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டம்
- *1941* ஆம் ஆண்டின் அனாதை இல்லங்கள் கட்டளைச் சட்டம்
- *1998* ஆம் ஆண்டின் *50*ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம்
- *2016* ஆம் ஆண்டின் *3*ஆம் இலக்க தேசிய குறைந்தபட்ச சம்பளங்கள் சட்டம்*,*
- *1981*ஆம் ஆண்டின் *72*ஆம் இலக்க தோட்டத் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகள் சட்டம்
- *2005* ஆம் ஆண்டின் *36* ஆம் இலக்க தொழிலாளர்களுக்கான வரவு செலவுத்திட்ட நிவாரண உதவித்தொகை சட்டம்
- *2016* ஆம் ஆண்டின் *4*ஆம் இலக்க தொழிலாளர்கள் வரவு செலவுத்திட்ட நிவாரண உதவித்தொகை *(BRAWA)* சட்டம்

- *1985* ஆம் ஆண்டின் *21* ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டம்
- கண்ணியமான வேலைக்கான தேசிய கொள்கை *(2006)*
- இலங்கையில் சிறுவர்களுக்கான தேசிய மாற்று பராமரிப்பு கொள்கை *(2019)*
- இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய கொள்கை *(2003)*
- முதியோர்களுக்கான தேசிய கொள்கை *(2006)*

## இணைப்பு *2* தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயம் *: 2030* ஆம் ஆண்டுக்கான பாதை (Annex 2. Outline of National Social Protection Strategy: Road to 2030)

குறிப்பு*:* தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயம் *(NSPS)* தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையுடன் *(NSPP)* இணைக்கப்படும். உள்ளடக்கத்தில் *(*வரையறை, நோக்கம், தொலைநோக்கு, செயற்பணி, கோட்பாடுகள்*)* சில ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்துவனவாகும் இதனால் *NSPS* ஒரு தனியான ஆவணமாக இருக்கும். ஏனைய பிரிவுகள் *NSPP*யின் மீது கட்டமைக்கப்படும்.

**முன்னுரை*:*** *(*ஜனாதிபதி, பிரதமர், அல்லது துறை அமைச்சரினால் வழங்கப்படும்*)*

**நிறைவேற்றுச் சுருக்கம்*:*** *NSPS* பற்றிய *1-2* பக்க சுருக்கத்தை வழங்குகிறது.

*1* **அறிமுகம்*:*** சமூக பாதுகாப்பு மற்றும் அதன் நோக்கத்தை வரையறுப்பதுடன், *NSPS* இன் தேவையை எடுத்துரைக்கிறது. *NSPP* இல் வரையறுக்கப்பட்ட *4* அடிப்படை ஆதாரங்களுடன் சீரமைத்து செயற்பரப்பை வரையறுக்கலாம், அவை*: (i)* சமூக உதவி *(ii)* சமூக காப்புறுதி *(iii)* சமூக பராமரிப்பு *(iv)* தொழிற் சந்தை மற்றும் உற்பத்தி உள்ளீர்ப்பு

*2* **தற்போதைய சமூகப் பாதுகாப்பு நிலப்பரப்பு *(Current Social Protection Landscape):*** சட்ட, நிறுவன மற்றும் நிகழ்ச்சித்திட்ட குறிப்பான பரிசீலனைகள் உள்ளடங்களாக தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு நிலப்பரப்பு (*Landscape)* பற்றிய மதிப்பீட்டை வழங்குகிறது. செயலாற்றுகை குறிகாட்டிகள் *(KPI*கள்*)* பல்வேறு நிலைகளில் *(*உயர் நிலை, அடிப்படை ஆதார நிலை*)* விரிவாக வரையறுக்கப்பட்டு இந்த மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும்.

*3* **மூலோபாய சட்டகம் *(Strategic Framework):*** தொலைநோக்கு, செயற்பணி மற்றும் இலக்குகள்*: NSPS* இன் மையக் கவனத்தை எடுத்துரைக்கிறது. தொலைநோக்கு மற்றும் செயற்பணி ஆகியவை *NSPP* உடன் இணைக்கப்படும். பிரிவு *2* இல் வரையறுக்கப்பட்ட *KPI*கள் மீது கவனத்தை ஈர்த்து இலக்குகள் அமைக்கப்படும்.

*4* **கோட்பாடுகள்** ***(Principles)*** *:* மூலோபாய சட்டகத்தின் மீது *(பிரிவு 3)* கவனத்தை ஈர்த்து, முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் உருவாக்கத்திற்கு வழிகாட்டும் அடிப்படைக் கொள்கைகளை அமைக்கிறது *(பிரிவு 5 மற்றும் 6).*

*5* **அடிப்படை ஆதாரம் மூலமான முக்கிய மூலோபாய தலையீடுகள்** ***(Key strategic interventions by pillar):*** ஒவ்வொரு அடிப்படை ஆதாரத்தின் கீழும் திட்டமிடப்பட்ட முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களைக் குறிக்கிறது. இது மூலோபாய நோக்கங்களை வரையறுத்து, பிரிவு *3* இல் வரையறுக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பிரிவு *4* இல் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள் மற்றும் தொடர்புடைய காலஎல்லையில் வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளை அடைய இது எவ்வாறு உதவும் என்பது உட்பட திட்டத்தின் விவரங்களை வழங்கும்.

*5.1* முக்கிய சமூக உதவித் திட்டங்கள்

*5.2* முக்கிய சமூக காப்புறுதித் திட்டங்கள்

*5.3* முக்கிய சமூக பராமரிப்புத் திட்டங்கள்

*5.4* முக்கிய தொழிற் சந்தை மற்றும் உற்பத்தி உள்ளீர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

***6.*** **நடைமுறைப்படுத்தல் திட்டம்*:*** ***(Implementation plan)*** பிரிவு *5* இல் வரையறுக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த சமூகப் பாதுகாப்பிற்கான உயர்நிலை நடைமுறைப்படுத்தல் திட்டத்தை விவரிக்கிறது. இது *4* உட்பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

***6.1*** **ஆளுகை*:*** சமூகப் பாதுகாப்பை நிர்வகிப்பதற்கான நிறுவன சட்டகத்தை கோடிட்டுக்காட்டுகிறது.

***6.2*** **ஒருங்கிணைப்பு*:*** அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒருங்கிணைப்பிற்கான பொறிமுறைகளை கோடிட்டுக்காட்டுகிறது.

***6.3*** **நிதியளிப்பு*:*** *NSPS* இல் விவரிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கான மூலோபாயங்களை கோடிட்டுக்காட்டுகிறது.

தன்னார்வ பங்களிப்புகள்

கட்டாய பங்களிப்புகள்

அடிப்படைத் தேவைகள், பொதுவாக அரசாங்கத்தால்

***6.4*** **கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு** ***(M&E):*** மேலும் விரிவான நிகழ்ச்சிநிரல் குறிப்பான *KPI*களுடன் சேர்த்து, பிரிவு *2* இல் வரையறுக்கப்பட்டுள்ள முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகள் *(KPI)* மீது கவனத்தை ஈர்த்து, முன்னேற்றத்தைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கான பொறிமுறைகளை கோடிட்டுக்காட்டுகிறது. நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பை மேம்படுத்துவதற்கான பொறிமுறைகள் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு *(M&E)* அடிப்படையிலான நடைமுறைப்படுத்தலும் பற்றி கலந்துரையாடப்படும்.

**இணைப்பு:** முன்னணி முகவர் நிறுவனம் மற்றும் முன்மொழியப்பட்ட வரவுசெலவுத்திட்டம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய விரிவான விளக்கத்தை வழங்குகிறது.